# பாட்டாளி சிந்தனை

Volume 27 No. 11

சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா (கம்யூனிஸ்ட்)

SUCI (Communist)

July 2017

தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டியின் மாத இதழ்

விலை ரூ 5


பொருளடக்கம்


- விவசாயிகளின் போராட்டங்களும் அதன் படிப்பினைகளும் பக்கம் 1
- மாபெரும் நவம்பர் புரட்சி பக்கம் 3


## பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் தலைவர் பிரெட்ரிக் எங்கெல்ஸுக்கு செவ்வணக்கம்



28 நவம்பர் 1920 – 5 ஆகஸ்ட் 1895

“முதலாளியானவர் இப்போது அவரது தொழிலாளியை வேலை செய்வதற்கு வைத்திருக்கிறார். தொழிலாளி ஒரு குறிப்பிட்ட கால வரையறையில் அவரது வாராந்திர ஊதியத்தைப் பிரதிபலிக்கும் வகையில் எவ்வளவு உழைப்பைச் செய்திட முடியுமோ அந்த அளவிற்கான உழைப்பை செய்து முடிக்கிறார். ஒரு தொழிலாளியின் வாராந்திர ஊதியம் மூன்று வேலை நாட்களைப் பிரதிபலிக்கிறதென வைத்துக் கொண்டால், பின்னர், அவர் திங்கட்கிழமையன்று வேலை செய்யத் துவங்குகிறாரெனில், புதன் கிழமை மாலைக்குள் அவருக்குக் வழங்கப்பட்ட ஊதியத்தின் முழு மதிப்பிற்குமான வேலையை செய்து முடித்துவிடுகிறார். ஆனால், அதற்குப்பிறகு வேலை செய்வதை அவர் நிறுத்திவிடுகிறாரா? இல்லவே இல்லை. முதலாளியானவர் அவரது வார உழைப்பினை விலைக்கு வாங்கிவிடுகிறார், தொழிலாளியானவர் வாரத்தின் அந்த கடைசி மூன்று நாட்களிலும் நிச்சயமாக வேலை செய்துகொண்டிருக்க வேண்டும். அவரது ஊதியத்தை ஈடுகட்டுவதற்கு அவசியமாக இருக்கின்ற நேரத்திற்கும் அதிகமாக செய்யப்படும் இந்த உபரி உழைப்புதான் உபரி மதிப்பிற்கு ஆதாரமாகவும் , இலாபமாகவும், நிலையாக வளர்ந்து அதிகரித்துவரும் மூலதனமாகவும் அமைகின்றது . . . உபரி மதிப்பின் தோற்றமானது (முதலாளிகளின் இலாபம் அந்த உபரி மதிப்பின் ஒரு பகுதியாகும்) இப்போது மிகத்தெளிவாகவும் இயற்கையாகவும் காணப் படுகின்றது. உழைப்புச் சக்திக்காக அவருக்குக் கொடுக்கப்பட்ட ஊதியத்தின் மதிப்பானது உழைப்புச் சக்தியிலிருந்து முதலாளி எவ்வளவு அபகரித்துக்கொள்கிறாரோ அதைவிட மிகவும் சிறியதே, துல்லியமாகக் கூறினால், உபரி மதிப்பு என்பது ஊதியம் தரப்படாத உழைப்பு, அதுதான் இந்த வித்தியாசம், அதுதான் முதலாளியின் பங்காக அமைகின்றது, இன்னும் மிகச்சரியாகக் கூறினால் முதலாளித்துவ வர்க்கத்தின் பங்காக அமைகின்றது.”

– **எங்கெல்ஸ்**

*(மூலதனம் தொகுதி 1)*

# விவசாயிகளின் போராட்டங்களும் அதன் படிப்பினைகளும்

மீண்டும் தமிழக விவசாயிகளின் ஒரு அமைப்பான தென்னிந்திய நதிகள் இணைப்பு சங்கத்தினர் டெல்லியில் போராட்டத்தை நடத்தத் துவங்கிவிட்டனர். வறட்சியின் காரணமாக தேசிய, தனியார் மற்றும் கூட்டுறவு வங்கிகளில் பெற்றுள்ள பயிர்க்கடன்களைத் தள்ளுபடி செய்ய வேண்டும், விளைபொருளுக்கு சரியான குறைந்தபட்ச ஆதார விலை நிர்ணயம் செய்ய வேண்டும், விவசாயத் தொழிலாளர்களுக்கு வறட்சி நிவாரணம் வழங்க வேண்டும், அண்டை மாநிலத்திலிருந்து தமிழகத் திற்கான நீர் உரிமையை நிலைநாட்ட வேண்டும் போன்ற இன்ன பிற கோரிக்கைகளுக்காக தொடர் போராட்டத்தைத் துவக்கிவிட்டனர். தமிழகத்தில் உள்ள விவசாயிகள் சங்க கூட்டமைப்புகளும் ஏற்கனவே இக்கோரிக்கைகளுக்காக சென்ற ஏப்ரல் 3 அன்று மாநிலம் தழுவிய பொது வேலை நிறுத்தம் நடத்தின. சேலம், நெல்லை, புதுக்கோட்டை, திருவாரூர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த பல்வேறு விவசாயச் சங்கங்களும் இடதுசாரிக் கட்சிகளைச் சேர்ந்த அகில இந்திய விவசாயச் சங்கங்களின் மாநில அமைப்புகளும் போராட்டத்தில் கலந்து கொண்டன. மேலும், விவசாய நிலங்களைக் கொடுத்து வாழ்வாதாரத்தைப் பாதிக்கும் நெடுவாசல் ஹைட்ரோகார்பன் திட்டத்தைக் கைவிட வேண்டும், கதிராமங்கலத்தில் நிலத்தில் கசியும் ஓஎன்ஜிசி குழாய்களை அகற்றவேண்டும் என பல கோரிக் கைகளை வைத்து விவசாயிகளுடன் மக்களும் ஜனநாயகரீதியில் போராடுகின்றனர்.

மத்தியிலும் மாநிலத்திலுமுள்ள ஆளும் கட்சித் தலைவர்கள் மக்களிடம் இத்திட்டங்களைத் திணிக்கமாட்டோம் என வாக்குறுதியைக் கொடுத்து விட்டு உண்மையில் அதற்கு மாறாகச் செயல்படு கின்றனர். போராடும் மக்கள் மீது குண்டர் சட்டத்தைப் போட்டு கைதுசெய்கின்றனர். வறட்சி நிவாரணம் கேட்டு அரை நிர்வாணமாக விவசாயிகள் போராடிக்கொண்டிருக்கும்போது எந்த மனக்கிலேசமும் இன்றி ‘மக்களுக்காகச் சேவை செய்யும்’ தமிழக எம்எல்ஏக்கள் தங்கள் ஊதியத்தையும் ஓய்வூதியத்தையும் இரட்டிப்பாக்கிக் கொள்கின்றனர். இச்சம்பவம் தமிழ் நாட்டு மக்களிடையே கடும் கோபத்தை உருவாக்கியிருக்கிறது. உலகம் சுற்றும் பிரதமர் திரு மோடிக்கு தன் வீட்டுவாசலில் நின்று போராடும் விவசாயிகளைச் சந்திக்க முடியவில்லை. பாஜக ஆட்சி செய்யும் மத்தியப்பிரதேசத்திலேயே போராடிய 6 விவசாயிகளை காவல்துறையினர் சுட்டுக் கொன்றனர்.

தமிழகத்தில் சுமார் 300க்கும் மேற்பட்ட விவசாயிகள் சென்ற சில மாதங்களில் தற்கொலை செய்துகொண்டதாக தகவல்கள் வந்திருகின்றன. மகாராஷ்டிரா, பஞ்சாப், உபி, மத்தியப் பிரதேசம் ஒடிஸ்ஸா என நாடுமுழுவதும் தற்கொலை செய்துகொண்ட விவசாயிகள் எண்ணிக்கை 3 இலட்சத்தைத் தாண்டிவிட்டது. தற்கொலைக்கான காரணத்தை ‘குடிபோதை, குடும்பப் பிரச்சினை, நோய், வரதட்சணைக் கொடுமை, காதல் தோல்வி’ என பூர்ஷ்வா அரசியல் கட்சித் தலைவர்கள் ஈவிரக்கமற்றமுறையில் கேலிசெய்திருக்கிறார்கள். மக்கள் போராட்டங்களிலிருந்து ஆளுவோரைக் காக்க, இந்திய ஏகபோகமாக முதலாளிகளுக்கு சேவை செய்ய எந்த அளவிற்கு இவர்கள் கீழே இறங்கி விட்டார்கள்!

அதேசமயம் விவசாயிகளின் ஜீவாதாரப் பிரச்சினை என்றுதான் தீரும் என்பது விவசாயிகளுக்கு மட்டுமின்றி மொத்த சமுதாயத்திற்கும் வேதனை மிகுந்த கேள்விக்குறியாக இருக்கின்றது.

## சின்னாபின்னமாகிவிட்ட விவசாயிகளின் வாழ்நிலை

விவசாய உற்பத்தியிலும் நிலப்பரப்பிலும் உலகில் ஐந்தாவது இடத்தில் இந்தியா இருப்பதாக புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன. ஆனால் ஊரக இந்தியாவில் நாம் காண்பதென்ன? நாட்டின் மக்கட்தொகையில் மூன்றில் இரண்டு பங்கினர்

தொடர்ச்சி 2ம் பக்கம்



ஜூன் 5, 2017 அன்று மத்திய பிரதேச மன்சோர்மாவட்டத்தில் நடைபெற்ற விவசாயிகள் போராட்டத்தில் 6 விவசாயிகள் சுட்டு கொல்லப்பட்டதை கண்டித்து நாடுமுழுவதும் ஜூன் 14 அன்று எமது கட்சியின் சார்பாக கண்டன நாள் அனுஷ்டிக்கப்பட்டது. உயிரழந்த விவசாயிகளுக்கு நாடுமுழுவதும் அஞ்சலி செலுத்தப்பட்டது

# விவசாயிகளின் பிரச்சினைகளுக்கு அடிப்படைக் காரணம் முதலாளித்துவ சுரண்டல் அமைப்பு முறையேயாகும்

1ம் பக்கத் தொடர்ச்சி

வாழும் கிராமங்களில் பாலாறும் தேனாறும் பாய்கின்றதா அல்லது பசியும் பஞ்சமும் தலை விரித்தாடுகிறதா? நிலத்தை சொத்தாகக் கொண்டிருந்த முன்னோர்களின் வயல்கள் தலை முறை தலைமுறையாகப் பங்கிடப்பட்டதால் தனிமனிதனின் கையில் நிலம் துண்டுதுண்டாகி துக்காணியாகிவிட்டது. போதிய நீர் வரத்து இல்லை, நிலத்தடி நீரும் அடிமட்டத்திற்குச் சென்றுவிட்டது. மண்ணின் வளமும் குன்றிவிட்டது. விதை, உரம், பூச்சி, மருந்து என இடுபொருட்களின் விலை எகிறிவிட்டது. உற்பத்தி குறைந்து விவசாயம் இலாபகரமாக இல்லாமல் போய்விட்டது. நவீன யுகத்திலும், விவசாயம் பருவமழையின் ஏற்றத் தாழ்வுகளுக்கு ஏற்ப தள்ளாடுவதும் இயற்கையின் சீற்றங்களுக்கு ஆளாவதுமாக இருக்கின்றது. ஈடுகட்டாத விலை, அரசு கொள்முதல் நிலையங் களில் ஊழல், அதிகரிக்கும் கடன் சுமை, இறுதியில் தற்கொலை – இவைதான் ஊரக விவசாயிகளின் வாழ்நிலை. திருமணம், உயர்கல்வி, மருத்துவச் செலவு, போன்றவற்றால் ஏற்படும் குடும்பக் கஷ்டத்தை குறைத்துக் கொள்ள கைவசம் இருக்கும் கொஞ்ச நஞ்ச நிலத்தையும் அடமானம் வைத்து இழந்தோ அல்லது விற்றோ ஓட்டாண்டியாக ஆகிடவேண்டிய நிலை.

இவ்வாறு நிலம் கிராமப்புறப் பெரும் பணக் காரர்களிடம் ஒருபுறம் குவிகிறது. மறுபுறம் நிலத்தை இழந்த நடுத்தர விவசாயிகள் குத்தகை விவசாயிகளாகவும் விளிம்புநிலை விவசாயிகளா கவும் அதுவுமற்றோர் கூலி விவசாயிகளாகவும் மாறிக்கொண்டிருக்கின்றனர். விவசாயம் இல்லா நாட்களில் இக்கூலி விவசாயிகள் கிடைக்கும் எந்த வேலையையும் எடுத்துச் செய்யும் தொழிலாளி களாக மாறிக்கொண்டிருக்கின்றனர்.

தனியார்மயம் தாராளமயம் என்ற உலகமயப் பொருளாதாரம் புகுத்தப்பட்ட கடந்த 25 ஆண்டு களில் நிலைமை இன்னமும் மோசமாகி விட்டது. மானியங்கள் நீக்கம் மற்றும் சர்வதேச சந்தைப் போட்டி போன்றவற்றால் வருமானம் இழந்து கோடிக்கணக்கில் அரைப் பாட்டாளிகளாகவும் முழுப்பாட்டாளிகளாகவும் இவர்கள் மாற்றப்பட்டு விட்டனர். புலம் பெயர்ந்த பாட்டாளிகளாக நகரத்தை நோக்கி கட்டுமானத் தொழில் மற்றும் இன்னபிற அடிமட்ட உழைப்புசார்ந்த பணிகள் போன்றவற்றில் ஈடுபட்டு கால் வயிற்றுக் கஞ்சிக்காக கடும் முதலாளித்துவச் சுரண்டலுக்கும் ஒடுக்குமுறைக்கும் தள்ளப்பட்டுவிட்டனர். புலம் பெயர்ந்த பல குடும்பங்கள் நடைபாதைகளில் வாழ்ந்துகொண்டும் அவர்களில் பலர் குப்பை களைப் பொறுக்கிக் கொண்டும் அதிலும் சிலர் பிச்சை எடுக்கும் நிலைக்கும் தள்ளப்பட்டு நாய்கள், பூனைகள்போல் அடையாளம் தெரியாத பிணங்களாக செத்துப் போகின்றனர். இவை யொன்றும் ஆதாரமற்ற புலம்பலல்ல. சமூகப் பொருளாதார கணக்கெடுப்பின்படி நாளொன்றுக்கு ஒவ்வொரு நாளும் 2035 பேர் ‘சாகுபடி செய்பவர்’ என்ற அந்தஸ்த்தை இழக்கின்றனர். ஊரக குடும்பங்களில் 50% தினக் கூலியாகவும் 6.68 இலட்சம் பேர் பிச்சைக்காரர்களாகவும் 4.04 இலட்சம் பேர் குப்பை பொறுக்குபவர்களாகவும் மாறிக்கொண்டிருக்கின்றனர். ஒவ்வொரு நாளும் 19.5 கோடி பேர் பட்டினி கிடக்கின்றனர். அதில் பலர் தற்கொலைக்கும் தள்ளப்படுகின்றனர். சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து இன்றுவரை கிராமபுறங்களில் இத்தகைய சீரழிந்துவரும் நிலைதான் தொடர்ந்துக்கொண்டு இருக்கின்றது.

## தமிழகத்தில் நடந்த விவசாயப் போராட்டங்கள்

தமிழகத்தின் விவசாயிகள் பல அடிப்படைக் கோரிக்கைகளுக்காக அரை நூற்றாண்டு காலமாகப் போராடிக்கொண்டிருக்கின்றனர். 1960களில் விவசாயத்தில் கூலித்தொழிலாளர்களாக இருந்த பெரும்பான்மை ஒடுக்கப்பட்ட மக்களை திரு சீனிவாசராவ், திருமதி மணியம்மை போன்ற இடதுசாரித்தலைவர்கள் அணிதிரட்டினர். குறிப்பாக, அன்று நெற்களஞ்சியமாக விளங்கிய தஞ்சை காவிரி டெல்டா மாவட்டத்தில் விவசாய சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டன. அதேபோல் தமிழ கத்தின் கொங்குநாட்டு பகுதிகளில் 1957லிலேயே விவசாயத்திற்கு இலவச மின்சார நேரத்தை 16 லிருந்து 4 மணியாக குறைத்ததைக் கண்டித்து விவசாயிகள் போராட்டத்தை திரு நாராயணசாமி நாயுடு நடத்தி வரலாற்றில் இடம்பிடித்தார். 1970–1972ல் மின்கட்டண உயர்வைத் திரும்பப் பெறுதல் உட்பட 12 அம்சக் கோரிக்கையை முன்வைத்து திரு நாராயணசாமி நாயுடு, திரு சிவசாமி ஆகியோர் தலைமையில் நடந்த மாட்டு வண்டி ஊர்வலப் போராட்டத்தை நியூயார்க் டைம்ஸ் உட்பட உலகப் பத்திரிகைகளே வியந்து பாராட்டின. ஊர்வலத்தில் ஈடுபட்ட விவசாயிகள் மீது அன்று திமுக அரசாங்கம் துப்பாக்கிச் சூட்டை நடத்தியது. அதன் பிறகு வந்த அதிமுகவின் ஆட்சியிலும் 80களில் நடந்த விவசாயிகளின் போராட்டத்தில் துப்பாக்கிச்சூடு தடியடி எல்லாம் நடத்தப்பட்டன. 1972லிருந்து 1992வரை போராட்டத்தில் கலந்துகொண்ட விவசாயிகள் 60 பேர் தமிழக அரசாங்கத்தால் சுட்டுக்கொல்லப் பட்டுள்ளனர். (தி இந்து, 02, ஏப்ரல் 2017). இன்றைக்கு விவசாயிகளின் கடன் தள்ளுபடிக் கோரிக்கையை ஆதரிப்பதாக நாடகமாடும் இக்கட்சிகள் அனைத்தும் ஏழை நடுத்தர விவசாயி களையும் கூலி விவசாயிகளையும் எப்படி நடத்தி வந்தனர் என்பதை மூத்த குடிமக்கள் நன்கறிவர்.

விஷயம் என்னவென்றால், இவ்வளவு போராட்டங்கள் நடந்தும் பிரதான கோரிக்கைகள் எவையும் இன்றளவும் நிறைவேற்றப்படாமல் இருக்கின்றன. விவசாய சங்கங்களிடையே ஒற்றுமை ஏற்பட இயலாமை, தேர்தல் நேரங்களில் தம்மை ஒடுக்கிய அரசியல் கட்சிகளையே ஆதரித்தல், நிலப்பிரப்புத்துவ சாதிய கட்டுத்தளை களிலிருந்து முழுவதும் விடுபடாமை ஆகியவை அதற்கான சில முக்கியக் காரணங்களாகும். அனைத்திற்கும் மேலாக, இந்தியாவில் விவசாயத் தொழில் அடைந்த மாறுதல்களையும் விவசாயி களின் வாழ்க்கைப் பிரச்சினைக்குக் காரணமான சமூகப் பொருளாதார சூழ்நிலைமைகளையும் புரிந்துகொள்ளத் தவறியதும் அடிப்படைக் காரணமாகும்.

அதிசயங்களைச் சிருஷ்டிக்கக்கூடிய நிலவளமும் நீர்வளமும் நிறைந்த நம் நாட்டில் ஏன் இந்த நிலை? சுதந்திரம் பெற்றுவிட்ட இந்நாட்டில் செல்வங்களை எல்லாம் அன்னியன் வந்து சுரண்டி எடுத்துக்கொண்டுபோகிறான் எனச் சொல்வது இனியும் பொருந்தாது. சொல்லப்போனால், ஆங்கிலேயன் ஆண்ட காலத்தைவிட இன்று நிலைமை படுமோசமாகிவிட்டது என அனுபவ மிக்க முதியோர்கள் அடிக்கடி சொல்வதைக் கேட்கமுடியும். ஒரு ஏக்கர் அரை ஏக்கர் நிலம் வைத்துக்கொண்டு விவசாயம் செய்தவர்கள்கூட அரைநூற்றாண்டுக்கு முன்பு குடும்பத்தின் சுயதேவையைப் பூர்த்திசெய்துகொண்டு கௌரவமாக வாழ முடிந்தது. இன்று 30 ஏக்கர் வைத்திருக்கிறேன் ஆனால் என் நிலைமையே இதுதான் என போராடும் திரு அய்யாக்கண்ணு அவர்கள் பேட்டி கொடுக்கிறார். ஆக, விவசாயிகள் தங்கள் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள, அனைத்துச் சுரண்டல்களிலிருந்தும் தம்மை விடுவித்துக் கொள்ள எதைச் செய்ய வேண்டும் எப்படிப் போராட வேண்டும் என்பது அடிப்படைக் கேள்வியாக இருக்கின்றது. இதற்கு வழிகாட்ட, எமது கட்சி சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா (கம்யூனிஸ்ட்) கட்சியின் ஸ்தாபகப் பொதுச் செயலாளரும் எமது ஆசானும் வழிகாட்டியும் இக்காலக் கட்டத்தின் தலை சிறந்த மார்க்சிய சிந்தனையாளர்களில் ஒருவருமான தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்கள் 1974ல் அகில இந்திய விவசாய விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் மேற்கு வங்க 24 பர்கானா மாவட்ட மாநாட்டில் ஆற்றிய உரையிலிருந்து சில படிப்பினைகளை இங்கு நினைவுகூறுகிறோம்.

## விவசாயத்தில் நிலவும் முதலாளித்துவ உற்பத்தி உறவுமுறை

அந்த உரையில் தோழர் சிப்தாஸ் கோஷ் சுட்டிக் காட்டினார்: “முதலாளித்துவப் பொருளாதாரமும் முதலாளித்துவ அரசு அமைப்பும்தான் மக்களின் மீதான அடக்குமுறைக்கும் சுரண்டலுக்கும் காரணம் என்பதை நீங்கள் மனதில் கொள்ள வேண்டும். நகரங்களிலுள்ள ஆலைகள் தொழிற் சாலைகள் என்றாலும் சரி, கிராமப்புறங் களிலுள்ள விவசாயப் பொருளாதாரம் என்றாலும் சரி முதலாளித்துவப் பொருளாதார உறவு முறைதான் இருந்து வருகின்றது. ...அடிப்படையில் லாபநோக்கம், உற்பத்தி உறவுகளில் உடைமை யாளர் – கூலி பெறுவோர் என்ற முதலாளித்துவ விதிகளால் ஆளப்படுகிறது என்பதை ஒப்புக் கொண்டேயாக வேண்டும்.” ஆக, விவசாயத் தொழிலாளர்கள் தங்கள் கூலியை மாதச் சம்பளமாக, நாட்கூலியாக, பணமாக, தானியமாக அல்லது மகசூலில் ஒரு பங்காக என எந்த வடிவத்தில் பெற்றாலும் அவர்கள் அடிப்படையில் கூலித்தொழிலாளிகளாக மாறிவிட்டனர் என்பதே நிதர்சன உண்மை.

அதே போன்று விவசாய உற்பத்திப் பொருட்கள் குறுகிய வட்டாரச் சந்தையில் விற்கப்படும் நிலை மாறி அவற்றின் விலைகள் தேசியச் சந்தையில் நிர்ணயிக்கப்படுகின்றன என்பதையும் தோழர் சிப்தாஸ் கோஷ் எடுத்துக்காட்டினார். விவசாயத்தில் ஏர் உழவு போன்ற பழைய தொழில்நுட்ப முறைகளே நிலவலாம். நிலப்பிரபுவத்தில் ஒடுக்கப்பட்ட சாதியினரே பெரும்பாலும் இன்று கூலித் தொழிலாளிகளாக இருக்கலாம். ஆயினும், முதலீடு செய்து இலாபமீட்டும் நோக்கமும், முதலாளி – தொழிலாளி என்ற உற்பத்தி உறவு முறையும் உற்பத்திப் பொருட்களின்மேல் ஆதிக்கம் செலுத்தும் வியாபார வணிக இயல்புகளும் தன்மைகளுமே விவசாயப் பொருளாதாரம் முதலாளித்துவமயமாகிவிட்டதா அல்லது பழைய நிலப்பிரபுத்துவ கிராமியப் பொருளாதாரமாக நீடிக்கிறதா என்பதைத் தீர்மானிக்கும் என மாபெரும் மார்க்சியத் தலைவர் லெனின் அவர்களும் விளக்கியுள்ளார்.

ஆக, நமது நாட்டில் இந்த முதாலாளித்துவ சுரண்டல்தான் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் காரணமாகும் என்று தோழர் சிப்தாஷ் கோஷ் விளக்குகின்றார். “இக்கருத்தை நாம் தெளிவாகப் புரிந்துகொள்ளாவிட்டால், இந்த அவசியமான அரசியல் விழிப்புணர்வை நாம் பெறத் தவறி விட்டால், நியாயமான கோரிக்கையான நிலத்தை பங்கிட்டு விநியோகிக்கவேண்டும் என்பதற்காகவும் கூலி உயர்வுக்காகவும் ஜனநாயக உரிமைகளுக்கா கவும் நாம் நடத்தும் எல்லா போராட்டங்களும் சூனியமாகிவிடும்; உழைக்கும் மக்களின், பாட்டாளி களின் விடுதலை என்பது தூரத்துக் கனவாகவே இருக்கும்” என்று அவர் எச்சரிக்கின்றார்.

## விவசாயிகளின் மீதான தொடர்ச்சியான தாக்குதல்கள்

நிலமற்றோருக்கு நிலம், கடன் தள்ளுபடி, மானியங்கள், நிவாரணங்கள் ஆகிய கோரிக்கை களுக்காகப் போராடும் அதே வேளையில் விவசாயத்தை நவீனமயப்படுத்தாமல் உற்பத்தியைப் பெருக்கமுடியாது என்பதையும் நாம் நினைவில் கொள்ளவேண்டும். தொடர்ந்து அதிகரித்துவரும் ஊரக மக்கள் தொகையையும் நிலையான பரப்பளவைக் கொண்டிருக்கும் நிலத்தையும் கணக்கில் கொண்டால் நிலமற்ற அனைவருக்கும் என்ன நிலம் பங்கீட்டு வழங்கமுடியும்? அதை வைத்துக்கொண்டு அவர்களால் வாழமுடியுமா? இருக்கும் நிலத்தையும் விற்கும் நிலைக்கு விவசாயிகள் தள்ளப்படக் காரணம் பிரதானமாக விவசாயம் சார்ந்த பிரச்சினையா அல்லது கிடுகிடுவென ஏறிவரும் விலைவாசி, தனியார் மயமாகிவிட்ட கல்வி, மருத்துவச் செலவீனங்கள் போன்ற வாழ்க்கைப் பிரச்சினைகளா? பின்னால் சொல்லப்பட்ட பிரச்சினைகள் விவசாயத்துறை

தொடர்ச்சி 6ம் பக்கம்

## மாபெரும் நவம்பர் புரட்சி

# பாட்டாளி வர்க்கத்தின் விடுதலைக்கு வழிகாட்டிக்கொண்டிருக்கின்றது

*[உலகின் முதல் சோசலிச அரசான சோவியத் யூனியன் உருவாவதற்கு அடித்தளமிட்ட வரலாற்று சிறப்பு மிக்க நவம்பர் புரட்சியின் நூற்றாண்டு கொண்டாட்டங்களையொட்டி எமது ஆங்கில ஏடான புரோலிடேரியன் எராவானது (Proletarian Era), மனித இன வரலாற்றில் சகாப்தம் படைத்த இந்த நிகழ்வு குறித்த பல்வேறு கட்டுரைகளை வெளியிட முடிவு செய்துள்ளது. இங்கே, பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் தலைவர் தோழர் லெனின் அவர்கள் தலைமையில் போல்ஷ்விக் கட்சி நிறுவப்பட்டு, புரட்சிக்கான தயாரிப்பு வேலைகள் மேற்கொண்டதன் போக்கு குறித்த கட்டுரைகளை மார்ச் 15, 2017 பதிப்பிலிருந்து தொடர்ச்சியாக வெளியிட நாங்கள் துவங்கியிருக்கின்றோம். அக்கட்டுரைகளை தமிழில் மொழிபெயர்த்து தொடர்ச்சியாக இங்கே பிரசுரிக்கிறோம்]*

*[பாட்டாளி சிந்தனை, தொகுதி 27, எண்: 10யின் தொடர்ச்சி]*

### தொழிலாளர்கள் மற்றும் படைவீரர்கள் பிரதிநிதிகளின் சோவியத்துக்கள்

இச்சூழ்நிலைமையில், 'சோவியத்துக்கள்' என்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. ஜார் ஆட்சிக்கெதிராக கொழுந்துவிட்டு எரிந்துகொண்டிருந்த அன்றைய போராட்ட நாட்களில், பாடுபடும் ரஷ்ய மக்கள் ஒரு புதிய போராட்டக் கருவியான–தொழிலாளர்கள் மற்றும் படைவீரர்கள் பிரதிநிதிகளின் சோவித்துக்களை உருவாக்கும் முயற்சியினை மேற்கொண்டனர். ஆலைகள் மற்றும் தொழிற்சாலைகள் அனைத்திலிருந்தும் வந்த பிரதிநிதிகள் அடங்கிய அத்தகைய தொழிலாளர்கள் பிரதிநிதிகளின் சோவியத்துக்கள், தொழிலாளர்களின் ஒருவகையான சொந்த வெகுஜன அமைப்பாக, இதற்கு முன்னர் உலகத்தில் பார்த்திராத வகையில் இருந்தது. 1905ல் முதன் முறையாக வந்துகொண்டிருந்த இந்த சோவியத்துக்கள், மக்களின் படைபாற்றல் கொண்ட ஒரு புதிய புரட்சிகர வடிவமாக அமைந்திருந்தது. அவைகள் யாவும் ஜார் ஆட்சியின் அனைத்து சட்டங்களையும் கட்டளைகளையும் எதிர்த்து நின்ற மக்கட்தொகையின் புரட்சிகரப் பிரிவினரைப் பிரத்தியேகமாகக் கொண்டு ஏற்படுத்தப்பட்டது. உண்மையில், இத்தகைய சோவியத்துக்கள்தான் ஓர் மாற்று அரசு அதிகாரமாக உருவெடுத்தது.

1905ல் நடந்த புரட்சியின் துவக்க நாட்கள் முதற்கொண்டே சோவியத்துக்கள் தங்களது பங்கினை ஆற்றத்துவங்கினார்கள். ஒருபுறம் சோவியத்துக்கள் அத்தகைய கிளர்ச்சியில் ஆயுதம் தாங்கிய அமைப்பாக செயல்பட்டனர். மற்றொரு புறம், அவர்கள் ஒரு புதிய புரட்சிகர சக்தியின் உட்கருவாக அமைந்துவிட்டனர். இரஷ்யாவின் பாடுபடும் மக்கள், சோவியத்துக்கள் மூலம் போராட்டம் நடத்தும் திட்டத்தினை முழுமனதாக ஏற்றுக்கொண்டனர். ஜார் ஆட்சி தூக்கியெறியப்பட்ட மறுகணமே அவர்கள் எண்ணற்ற புதிய சோவியத்துக்களை அமைத்திடும் கடமையை மேற்கொண்டனர்.

இருப்பினும், 1905ல் ஏற்படுத்தப்பட்ட சோவியத்துக்கள் மற்றும் 1917ல் ஏற்படுத்தப்பட்ட சோவியத்துக்களுக்கிடையே ஒரு வேற்றுமை காணப்பட்டது. 1905ல் ஏற்படுத்தப்பட்ட சோவியத்துக்கள் முழுக்க முழுக்க தொழிலாளர்களின் பிரதிநிதிகளைக் கொண்டு கட்டப்பட்டதாகும், ஆனால் 1917ல் அத்தகைய சோவியத்துக்கள் படைவீரர்களையும் இணைத்துக்கொண்டு ஏற்படுத்தப்பட்டதாகும். பிப்ரவரி புரட்சியின் துவக்க நாட்களிலேயே போராட்டத்தில் பங்கெடுத்த படைவீரர்களும் தொழிலாளர்களும், தொழிலாளர்கள் பிரதிநிதிகள் மற்றும் படைவீரர்கள் பிரதிநிதிகளைக்கொண்ட சோவியத்துக்களை உருவாக்கினார்கள். இத்தகைய சோவியத்துக்கள் ஆற்றிய பங்குதான் புரட்சியின் வெற்றிக்கு பிரதான காரணியாக அமைந்தது.

### தற்காலிக அரசாங்கம் உருவான விதம்

பிப்ரவரி புரட்சியின்போது, போல்ஷ்விக்குகள் வெகுஜனங்களின் போராட்டங்களை தெருக்களில் நேரடியாகத் தலைமையேற்று நடத்திக்கொண்டிருந்த சமயத்தில், சமரசவாத மென்ஷ்விக்குகள் மற்றும் சோசலிஸ்ட் புரட்சியாளர்கள் யாவரும் சோவித்துக்களின் பதவிகளைப்பிடித்து அங்கு தங்களின் பெரும்பான்மையை நிறுவிக்கொள்வதில் மும்முரமாக ஈடுபட்டுக்கொண்டிருந்தனர். உண்மையில், பெரும்பான்மையான போல்ஷ்விக் தலைவர்கள் சிறையிலிருந்ததால் மற்றும் நாடு கடத்தப்பட்டிருந்ததால் இவர்களால் இச்சாதனையைச் செய்திட வசதியாய் அமைந்துவிட்டது. அதன் விளைவாக, பெட்ரோகிராட், மாஸ்கோ மற்றும் எண்ணற்ற நகரங்களில் சோவியத்துக்களின் தலைமையானது மென்ஷ்விக்குகள் மற்றும் பிற சமரசவாத கட்சிகளின் கைகளில் சென்றுவிட்டது. ஒருசில இடங்களில் மட்டுமே போல்ஷ்விக்குகளால் சோவித்துக்களின் தலைமையை தக்கவைத்துக்கொள்ள முடிந்தது.

தொழிலாளர்கள் மற்றும் படைவீரர்களின் புரட்சிகரப் பிரிவினர், சோவியத்துக்கள் புரட்சியாளர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றிடும் என்றும், முதலில் அது அமைதியை இறுதியாகக் கொண்டுவரும் எனறும் நம்பினார்கள். ஆனால் மென்ஷ்விக்குகள் மற்றும் சோசலிஸ்ட் புரட்சியாளர்கள் போரை முடிவுக்குக் கொண்டுவரவும் அமைதியை நிலைநாட்டிடவும் குறைந்தபட்ச அக்கறைகூட காட்டவில்லை. புரட்சியானது ஏற்படுத்தித்தந்த வாய்ப்பினை பயன்படுத்தி பூர்ஷ்வா வர்க்கத்தினருக்கு அதிகாரத்தை ஒப்படைத்திட அவர்கள் விரும்பினார்கள். அதன் படி, பிப்ரவரி 27 அன்று (புதிய நாட்காட்டியின் படி மார்ச், 12) மென்ஷ்விக்குகளும் சோசலிஸ்ட் புரட்சியாளர்களும் தாராளவாத, நான்காவது அரசு டூமா (ரஷ்ய பாராளுமன்றம்) உறுப்பினர்களும் ஒரு ரகசிய ஒப்பந்தத்தை ஏற்படுத்திக்கொண்டு, டூமா அரசின் ஒரு தற்காலிக கமிட்டியை ஏற்படுத்தினர். சில நாட்களுக்குப்பின்பு, இக்கமிட்டியும் சோசலிஸ்ட்–புரட்சியாளர்கள், சோவியத்தின் நிர்வாகக் கமிட்டி மற்றும் மென்ஷ்விக் தலைவர்கள் ஒன்றிணைந்த ஒரு தற்காலிக அரசாங்கத்தை ஏற்படுத்திடுவதற்கான ஒப்பந்ததத்தைச் செய்துகொண்டனர். இந்த ஒட்டுமொத்தத் திட்டத்தை போல்ஷ்விக்குகளுக்குத் தெரியாமல் அவர்கள் ரகசியமாக வைத்திருந்தனர். அந்த தற்காலிக அரசாங்கத்தில் இணைந்தவர்களில், முதலாளித்துவ வர்க்கத்தின் சில முக்கிய பிரதிநிதிகளும் மற்றும் 'ஜனநாயகம்' என்பதின் பிரதிநிதியான சோசலிஸ்ட்–புரட்சிகர கெரென்ஸ்கி என்பவரும் அடங்குவர்.

இத்தகைய தற்காலிக அரசாங்கத்தை ஏற்படுத்தியதின் மூலம் சோவியத்துக்கள் நிர்வாகக்குழுவின் சமரசவாதத் தலைவர்கள் உண்மையில் அரசு அதிகாரத்தை பூர்ஷ்வா வர்க்கத்தினரிடம் ஒப்படைத்துவிட்டனர். லெனினது வார்த்தைகளில் கூறுவதானால், "பூர்ஷ்வாக்கள் மற்றும் பூர்ஷ்வாக்களாக மாறிய நிலப்பிரபுக்களைக் கொண்ட" ஒரு புதிய அதிகாரம் உருவானது.

### தற்காலிக அரசாங்கம் மற்றும் சோவியத்துக்களின் இரட்டை (Dual Power) அதிகாரம்

தற்காலிக அரசாங்கத்திற்கு இணையாகவே, 1917ல் பிப்ரவரி புரட்சிக்குப் பின்னர் மற்றுமொரு அதிகாரம் அதன் சொந்த மகத்துவத்தின் காரணமாக கூடவே இருந்து வந்தது. அது தொழிலாளர்கள் மற்றும் படைவீரர்களின் பிரதிநிதிகளைக் கொண்டு கட்டப்பட்ட மக்கள் கமிட்டிகளான அந்த சோவியத்துக்களின் அதிகாரமேயாகும். சோவியத்துக்களில் இருந்த படைவீரர் பிரதிநிதிகளில் பெரும்பான்மையானோர் போருக்கு முன்பு விவசாயிகளாயிருந்து, பின்னர் ஜாரின் உத்தரவுகளுக்கிணங்க கட்டாயத்தின்பேரில் ஆயுதங்களைக் கையிலெடுத்தவர்கள் ஆகும். தொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் போரில் இணைந்த விவசாயிகளாயிருந்த படைவீரர்களின் பிரதிநிதிகளைக் கொண்ட, இரஷ்யாவிலிருந்த அப்போதைய சோவியத்துக்கள் ஜார் ஆட்சியை எதிர்ப்பதற்கான பாட்டாளிவர்க்க சர்வாதிகார அமைப்புகளாக எழுந்தன.

எனவே அப்போதைய இரஷ்யாவில், ஒரு இரட்டை சர்வாதிகாரமானது கூடவே இருந்துகொண்டிருந்தது. ஒருபுறம் தற்காலிக அரசாங்கமும் மற்றொருபுறம் தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளின் சர்வாதிகாரமும் கூடவே இருந்தது. "தற்காலிக அரசாங்கமானது இருந்துகொண்டிருக்கின்றது, பலவீனமாக இருப்பினும் மற்றும் அதன் ஆரம்ப கட்டத்திலிருந்தாலும் சந்தேகத்திற்கிடமின்றி சோவியத் தொழிலாளர் மற்றும் படைவீரர் பிரதிநிதிகளின் அரசாங்கமும் கூடவே இருந்துகொண்டிருக்கின்றது" என லெனின் அவர்கள் இதனை விளக்கிக் கூறினார். *(தொகுப்பு நூல், தொகுதி 14)*

1917ல் நடந்த பிப்ரவரி புரட்சிக்குக்கு முன்பு, தெருக்களில் மக்களின் போராட்டத்தை போல்ஷ்விக்குகள் தீவிரமாக வழிநடத்திக்கொண்டிருக்கையில், சமரசவாதக் கட்சிகளான சோசலிஸ்ட்–புரட்சியாளர்கள் மற்றும் மென்ஷ்விக்குகள் பெட்ரோகிராட் மாஸ்கோ மற்றும் எண்ணற்ற பிற இடங்களின் சோவியத்துக்களில் பதவிகளைப் பிடித்துக்கொண்டனர் என்பது ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ளது. ஆக, மென்ஷ்விக்குகள் மற்றும் சோசலிஸ்ட்–புரட்சியாளர்கள் முதலாளித்துவவாதிகளுடன் கொண்டிருந்த ஒரு ரகசிய புரிதலின் பேரில் ஒரு தற்காலிக அரசாங்கத்தை அமைத்துக்கொண்டு ஆட்சியதிகாரத்தை இரஷ்ய பூர்ஷ்வாக்களுக்கு வழங்கிவிட்ட நிலையில், போல்ஷ்விக்குகள் எவ்வளவுதான் எதிர்த்த போதிலும், அத்தகைய தற்காலிக அரசாங்கம் அமைத்திடும் நடவடிக்கைக்கு பெரும்பான்மையான சோவியத்துக்கள் ஆதரவாக இருந்தனர். இவ்வுண்மையை விளக்குகையில் லெனின் அவர்கள், அரசியலில் அனுபவமில்லாத லட்சக் கணக்கான மக்கள் அரசியல் செயல்பாடுகளில் இணைந்திருக்கையில், ஐரோப்பா மற்றும் குறிப்பாக இரஷ்யாவில் வீசிய குட்டி முதலாளித்துவ அலையின் தாக்கத்தினால், தொழிலாளர்கள் விவசாயிகள் மற்றும் சிறு உடைமையாளர்களிடம் குட்டி முதலாளித்துவ மனப்பான்மை தொற்றிக் கொண்டு அதில் ஈர்க்கப்பட்டிருந்தனர் எனக் குறிப்பிட்டார். மேலும், தொழிலாளர்களின் சேர்க்கையில் ஏற்பட்டிருந்த மாற்றத்தைச் சுட்டிக் காட்டி, கிட்டத்தட்ட 40 சதவீத நிரந்தரத் தொழிலாளர்கள் போரில் ஈடுபடுத்தப்பட்டு, அதே நேரம் பாட்டாளிவர்க்க மனநிலை அந்நியமாகப்பட்ட பல சிறு உடைமையாளர்கள், கலைஞர்கள், கடைக்காரர்கள் ஆகியோர் தாங்கள் அணிதிரட்டப்படுவதிலிருந்து தப்பித்திட தொழிற்சாலைகளுக்குச் சென்றனர். தொழிலாளர்களின் இத்தகைய பிரிவினர்தான் மென்ஷ்விக் மற்றும் சோசலிஸ்ட் புரட்சியாளர்கள் போன்ற குட்டி முதலாளித்துவ அரசியல்வாதிகள் வளர்ந்திடுவதற்கான ஆதாரமாக இருந்தன. துவக்க மாதங்களில், புரட்சியின் வெற்றி மயக்கத்தில், பெரும் எண்ணிக்கையிலான மக்கள் சமரசவாத கட்சிகளின் செல்வாக்கால் ஈர்க்கப்பட்டு, பூர்ஷ்வாக்கள் சோவியத்துக்களின் பணிக்கு இடைஞ்சலாக இருக்கமாட்டார்கள் என்ற அப்பாவித்தனமான நம்பிக்கையினால், பூர்ஷ்வாக்களுக்கு ஆட்சியதிகாரத்தை விட்டுக்கொடுத்திட இசைந்தனர்.

இத்தகைய சூழ்நிலைமையில், மக்களின் முன்பாக தற்காலிக அரசாங்கத்தின் ஏகாதிபத்திய

தொடர்ச்சி 4ம் பக்கம்

## மாபெரும் நவம்பர் புரட்சி

# பிப்ரவரி புரட்சிக்கு முன்பும் பின்பும் சோவியத்துக்கள் ஆற்றிய பங்கு

3ம் பக்கத் தொடர்ச்சி

குணாம்சத்தையும், மென்ஷ்விக்குகள் மற்றும் சோசலிஸ்ட் புரட்சியாளர்களின் துரோகத்தையும் விளக்கி அம்பலப்படுத்திடும் கடமையை போல்ஷ்விக்குகள் எதிர்கொண்டனர். அதே நேரத்தில், தற்காலிக அரசாங்கம் தூக்கியெறியப் படவில்லையெனில், அரசு அதிகாரம் சோவியத் துக்களின் கைகளில் வந்து சேரவில்லையெனில், நாட்டில் அமைதி ஏற்படாது என்பதையும் உணவிற்கும் நிலத்திற்குமான அவர்களின் கோரிக்கைகளை ஒருபோதும் வென்றெடுக்க முடியாது என்பதையும் மிகுந்த பொறுமையுடன் மக்களிடம் விளக்கிட ஆரம்பித்தனர்.

மக்களிடம் உண்மையை புரியவைத்திடும் கடுமையான பணியால் அதன் அனைத்து பலமும் சரிந்துவிட்ட நிலைமையில், போல்ஷ்விக் கட்சியானது பிப்ரவரி புரட்சி நடந்த வெறும் 5 நாட்களுக்குப் பிறகு, போல்ஷ்விக் பத்திரிகையான பிராவ்தாவை மீண்டும் பிரசுரித்தது. மேலும் சில நாட்களுக்குப் பின்னர், சோசியல் டெமாக்ரேட் பத்திரிகையும்கூட மீண்டும் வெளிவந்துவிட்டது. தாராளவாத பூர்ஷ்வாக்கள், சோசலிஸ்ட்–புரட்சியாளர்கள் மற்றும் மென்ஷ்விக்குகள் மீதான நம்பிக்கையை மக்கள் படிப்படியாக இழக்க ஆரம்பித்தனர். அதே நேரத்தில், போல்ஷ்விக் கட்சியின் தலைமையானது மக்களது மனதில் இடம் பிடித்துவிட்டது. விவசாயிகளிடமும் படை வீரர்களிடமும், அவர்கள் தொழிலாளர்களுடன் இணைந்திட வேண்டியதின் அவசியத்தையும், புரட்சி முன்னேறிச்செல்வதன் மூலம் தற்காலிக அரசாங்க மானது தூக்கியெறியப் பட்டு சோவியத்துக்களின் ஒரு அரசாங்கம் ஏற்படுத்தப் படவில்லையெனில், அமைதியையோ அல்லது நிலத்தையோ அல்லது உணவையோ பெற்றிட முடியாது என கட்சித் தொண்டர்கள் விளக்கினார்கள்.

தற்காலிக அரசாங்கத்தின் நடத்தை மற்றும் செயல்பாடுகள் யாவும், போல்ஷ்விக் கட்சியின் வழியே சரி என்பதற்கான அத்தாட்சிகளை தினமும் வழங்கிக்கொண்டிருந்தன. தற்காலிக அரசாங்கமானது மக்களின் நலன்களுக்காகவோ அல்லது அமைதியை நிலைநாட்டுவதற்காகவோ செயல்படாது என்பதும், அது மக்களின் நலன்களுக்கு எதிராகவும் போரை ஆதரித்தும் நிற்கின்றது என்பதும் மற்றும் இந்த அரசாங்கம் மக்களுக்கான உணவை, நிலத்தை மற்றும் அமைதியை உத்திரவாதப்படுத்தாது என்பதும் மெல்ல மெல்ல பட்டவர்த்தனமாகத் தெரிய வந்தது. ஆங்கே, தொழிலாளர்களும் படைவீரர்களும் தங்களின் உதிரத்தைச் சிந்தி, புரட்சியின் மூலம் ஜார் ஆட்சியை வேரோடு சாய்த்திட முன்னேறிக் கொண்டிருக்கையில், தற்காலிக அரசாங்கமானது முடியாட்சியை நிச்சயம் எப்படியாவது தக்கவைத்திட விரும்பியது. இரஷ்ய முதலாளிகள் மற்றும் நிலப்பிரபுக்களின் பிரதிநிதிகளைக்கொண்ட தற்காலிக அரசாங்கத்திற்கு விவசாயிகளிடம் நிலத்தை திரும்பிக் கொடுக்க விருப்பமில்லை. சாமானிய மக்களுக்கு உணவினை அளிப்பது பற்றி அவர்களால் கனவிலும்கூட நினைத்துப் பார்த்திட முடியவில்லை. அப்படிச் செய்தால், பெரும் தானிய வியாபாரிகள், நிலப்பிரபுக்கள் மற்றும் குலக்குகள் (பெரிய, அதாவது பணக்கார விவசாயிகள்) ஆகியோரின் நலன்களை மீறுவதாகி விடும். உண்மையில், இந்த தற்காலிக அரசாங்க மானது இரஷ்ய செல்வந்தர் வர்க்க நலன்களின் பாதுகாவலனாக இருப்பதினால், எந்த வகையிலும் அத்தகைய ஒரு நடவடிக்கையை அதனால் எடுக்க முடியாது. மேலும், அது பிரிட்டிஷ் மற்றும் பிரெஞ்ச் ஏகாதிபத்தியவாதிகளுக்கு கடமைப் பட்டிருப்பதால், தற்காலிக அரசாங்கத்திற்கு போரை முடிவுக்குக் கொண்டுவருவதில் எண்ணமில்லை. மாறாக, அந்த போரின் மூலம் இரஷ்ய ஏகாதிபத்தியத்தின் திட்டத்தை அது நடைமுறைப்படுத்திட விரும்பியது.

பிப்ரவரி புரட்சிக்குப் பின்னர் ஏற்பட்ட இரட்டை அதிகாரம் நீண்ட காலம் நிலைத்திருக்காது என்பது மெல்ல மெல்ல தெளிவாகத் தெரிய வந்தது. அதிகாரமானது ஒன்று, சோவியத்துக் களின் கைகளில் குவியப்பட வேண்டும் அல்லது தற்காலிக அரசாங்கத்தின் கைகளில் குவியப்பட வேண்டும்.

### பிப்ரவரி புரட்சிக்குப் பிந்தைய இரஷ்ய சூழ்நிலைமை

இவையனைத்தும் இருந்தபோதிலும், சோசலிஸ்ட்–புரட்சியாளர்கள் மற்றும் மென்ஷ்விக்குகள் போன்ற அத்தகைய சமரசவாத கட்சிகளின் கொள்கைகளை மக்களின் ஒரு பெரும் பிரிவினர் ஆதரித்தனர். அரசியல் சட்டசபையானது அனைத்துப் பிரச்சினைகளுக்கான தீர்வினை அமைதி வழியில் விரைவிலேயே கொண்டுவரும் என அவர்கள் இன்னும் நம்பினார்கள். அதே சமயம், தற்காலிக அரசாங்கமானது புரட்சிகர இயக்கத்திற்கு எதிரான பல்வேறு கள்ளத்தனமான திட்டங்களை மேற்கொண்டது. அது மட்டுமின்றி, சட்டம் ஒழுங்கினை, அதாவது 'ஒழுங்கினை' பராமரிக்கின்றோம் என்ற பெயரில், மக்களின் பல ஜனநாயக செயல்பாடுகளை அது சுருக்கிவிட்டது. ஆனால் அது முடியவில்லை. நாட்டின் அரசியல் வாழ்க்கையில் தீவிரமாகப் பங்கெடுத்திட, சூழ்நிலைமையை மதிப்பீடு செய்து அடுத்ததாக என்ன செய்திட வேண்டும் என்பதை முடிவு செய்ய, அவர்களின் அறிவுகூர்மையைப் பயன் படுத்திட ஏதுவாயிருக்கக்கூடிய கருத்து வெளியிடும் சுதந்திரம், பத்திரிகைச் சுதந்திரம், சங்கம் அமைத்துக்கொள்ளும் சுதந்திரம், ஒன்று கூடிடும் சுதந்திரம் மற்றும் ஆர்ப்பாட்டங்கள் நடத்திடும் சுதந்திரம் போன்ற ஜனநாயக உரிமைகளை இரஷ்ய தொழிலாளர்களும் படை வீரர்களும் முழுமையாகப் பயன்படுத்திக்கொண்டனர்.

ஜார் ஆட்சியின்போது போல்ஷ்விக் கட்சியானது, மிகவும் கடினமான சூழ்நிலைமையில் ரகசியமாகப் பணியாற்றிட வேண்டியிருந்தது. பிப்ரவரி புரட்சிக்குப் பின்பு, அவர்கள் தங்கள் அமைப்பினை வெளிப்படையாகக் கட்டிடவும், அரசியல் பணிகளை கையிலெடுக்கவும் ஆரம்பித்தனர். போல்ஷ்விக் கட்சியின் அமைப்பு ரீதியிலான பலம் 40,000 அல்லது 45,000 த்தை விஞ்சவில்லை. ஆனால், எண்ணிக்கையில் வெகு சிலரேயாயினும், அத்தகைய கட்சி உறுப்பினர்கள் யாவரும் புரட்சியின் தீயில் புடம் போடப்பட்டவர்களாகவும் மற்றும் புரட்சிக்கான விசுவாசத்தில் ஊசலாட்டம் அற்றவர்களாகவும் இருந்தனர் ■

*(இதன் தொடர்ச்சி அடுத்த இதழில் . . .)*

# சமீபத்தில் போடப்பட்ட இந்திய–இஸ்ரேல் ஒப்பந்தங்களை எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சி கண்டிக்கின்றது

*எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் பிரவாஸ் கோஷ் அவர்கள் ஜூலை 07, 2017 அன்று வெளியிட்ட அறிக்கை:*

பாலஸ்தீனத்திற்கு பாராமுகம் காட்டி இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவுடன் ஒட்டி உறவாடும் பிரதம மந்திரி மோடியின் செயலை எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சி கண்டிக்கின்றது. இந்திய பிரதம மந்திரி அவரது சமீபத்திய இஸ்ரேல் விஜயத்தின்போது தொழில்நுட்பக் கண்டுபிடிப்பு களில் பரஸ்பர ஒத்துழைப்பு, பயங்கரவாதத்தை எதிர்கொள்வது உள்ளிட்ட பல்வேறு ஒப்பந்தங்களில் இஸ்ரேலிய அரசாங்கத்துடன் கையெழுத்திட்டிருக்கின்றார்.

பாலஸ்தீன மக்களுக்கெதிரான அதன் மனிதாபிமானமற்ற மற்றும் ஈவிரக்கமற்ற ஆக்கிரமிப்பின் காரணமாக, அதன் சட்ட விரோத, பாலஸ்தீனத்தின் பகுதியை வலுக்கட்டாயமாக ஆக்கிரமித்ததின் காரணமாக, யூத இஸ்ரேலிய நிர்வாகம்தான் உலகத்தின் ஜனநாயக எண்ணம் கொண்ட மக்களால் மிகவும் வெறுக்கப்படும் ஒன்றாகும். இந்தியப் பிரதமர் அவரது சமீபத்திய விஜயத்தின்போது, இஸ்ரேலிய அரசாங்கத்துடன் தொழில்நுட்ப கண்டுபிடிப்புகள், பயங்கர வாதத்தை எதிர்கொள்வது உள்ளிட்ட எண்ணற்ற உடன்படிக்கைகளில் கையெழுத்திட்டுள்ளார். யூத இஸ்ரேலிய நிர்வாகமானது, பாலஸ்தீன மக்களுக் கெதிரான அதன் மனிதாபிமற்ற மற்றும் ஈவிரக்க மற்ற ஆக்கிரமிப்பு, அதன் சட்ட விரோத, பாலஸ்தீனப் பகுதியின் வலுக்கட்டாய குடியமர்வு மற்றும் பிற அரேபிய நாடுகளுக்கெதிரான அதன் போர்வெறி நடவடிக்கையின் காரணமாக சியோனிஸ்ட் இஸ்ரேலிய நிர்வாகம்தான் உலகத்தின் ஜனநாயக எண்ணம் கொண்ட மக்களால் மிகவும் வெறுக்கப் படுகின்ற ஒன்றாக இருக்கின்றது. இந்த வெறுக்கத் தக்க ஆக்கிரமிப்புத்தன்மைகொண்ட இஸ்ரேலிய அரசுடன் இந்தியா போர் உபாயக் கூட்டு செய்து கொண்டிருப்பது இந்திய மக்களின் ஏகாதிபத்திய எதிர்ப்புப் பாரம்பரியத்திற்கு எதிராக நிற்கின்றது. விடுதலை பெற்ற நாள் முதற்கொண்டு இந்திய அரசாங்கம் பாலஸ்தீனத்திற்கு ஆதரவாக நின்று, குறைந்த பட்சம் வாய்ச்சொற்கள் மூலமாக, இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு மற்றும் விரிவாக்கக் கொள்கைகளை எப்போதுமே எதிர்த்து வந்தது. ஆனால் சமீப ஆண்டுகளாக, இத்தகைய இந்திய கொள்கையில் தலைகீழ் மாற்றம் என்பது மேலும் மேலும் அம்பலப்பட்டு வருகின்றது. உண்மையில், இந்தியா பாலஸ்தீனத்திற்குக் கொடுக்கும் ஆதரவை கைவிட்டுவிட்டு, பாதுகாப்பு விஷயங்களில் மற்றும் ஆயுதக் கொள்முதலில் இஸ்ரேலுடன் ஒத்துழைப்பு மேற்கொண்டு வந்து கொண்டிருக்கின்றது. தொழில்நுட்பச் சமீபத்திய ஒப்பந்தம் தொழில்நுட்பப் புதுமைக் கண்டுபிடிப்புகள் என்ற பெயரில், அதி நவீன போர்த்தளவாடங்களை உற்பத்தி செய்வதற்கும் வாங்குவதற்கும் அழுத்தம் தரப்படுகின்றது. உண்மையில் இந்தியாவானது ஒரு பிராந்திய வல்லரசாகும் அதன் முயற்சியில் யுஎஸ் ஏகாதிபத்தியத்துடனும் மத்தியக் கிழக்கில் அதன் ராணுவ புறக்காவற்படையாக இருக்கும் சியோனிஸ்ட் இஸ்ரேலுடனும் இணைந்து கொண்டிருக்கின்றது.

எஸ்யுசிஐ ( கம்யூனிஸ்ட் ) கட்சியானது நரேந்திர மோடி அரசாங்கத்தின் இத்தகைய அப்பட்டமான ஏகாதிபத்திய நிலைபாட்டை எதிர்ப்பதுடன் அதன் இஸ்ரேல் ஆதரவு நிலைபாட்டைக் கைவிட வேண்டுமென்றும் பாலஸ்தீன மக்களின் நியாயமான கோரிக்கைக்காக நிபந்தனையற்ற ஆதரவினை மீண்டும் வலியுறுத்திட வேண்டு மென்றும் கோருகின்றது ■

# மத்தியப்பிரதேச மாநிலத்தில் போலீஸ் துப்பாக்கி சூட்டினால் விவசாயிகள் கொடூரமாகக் கொல்லப்பட்டதற்குக் கண்டனம்

*எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் பிரவாஸ் கோஷ் அவர்கள் ஜூன் 8, 2017 அன்று வெளியிட்ட அறிக்கை:*

பாஜகவின் தலைவர்கள் அடிக்கடி விவசாய வளர்ச்சியின் மாதிரி மாவட்டமென முன்னிறுத்துகின்ற மத்தியப் பிரதேசத்தின் மன்சோர் மாவட்டத்தில், கடந்த ஜூன் மாதம் 5ஆம் தேதியன்று பாஜக தலைமையிலான மத்தியப் பிரதேச அரசாங்கத்தின் போலீசானது போராட்டம் நடத்திய விவசாயிகள் மீது துப்பாக்கி சூடு நடத்தி ஐந்து விவசாயிகளைக் கொன்றதுடன் பலரைப் படுகாயமடைய வைத்திருப்பதையும் நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம். அரசாங்கமானது, கடனைத் தள்ளுபடி செய்திடவேண்டும் மற்றும் அவர்களின் விவசாய விளைபொருட்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலையை நிர்ணயித்திட வேண்டும் என்ற நியாயமான கோரிக்கையை விவசாயிகள் விடுத்துக்கொண்டிருந்தனர்.

மத்தியப்பிரதேசம் மட்டுமின்றி, அருகாமையிலுள்ள மகாராஷ்ட்ரா, கடைகோடியிலிருக்கும் தமிழ்நாடு அல்லது உ பி, குஜராத், ஹரியாணா, ராஜஸ்தான் மற்றும் பஞ்சாப் ஆகிய மாநிலங்களைச் சார்ந்த துன்புற்றுக்கொண்டிருக்கும் விவசாயிகள் அதிருப்தியில் கொதிப்படைந்து, கடன் நிவாரணம் மற்றும் தங்களின் விளைபொருட்களுக்கு ஆதாய விலை வேண்டுமென்று கோரி பல்வேறு வடிவங்களில் போராட்டங்களை நடத்திக்கொண்டிருக்கின்றனர். மகாராஷ்டிர மாநில விவசாயிகள் 2 நாட்கள் கடையடைப்பு நடத்தினர், வறட்சியினால் பாதிக்கப்பட்ட தமிழ்நாடு விவசாயிகள் டெல்லியில் 40 நாட்கள் தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர்.

விவசாயிகளை ஏமாற்றிட, பல்வேறு மாநில அரசாங்கங்களும் ஏழை விவசாயிகளுக்கு பயன்கள் கிடைத்திடாவண்ணம் தேர்வு செய்யப்பட்ட சில பயிர்களுக்கு கெடுபிடியான நிபந்தனைகளுடன் கூடிய குறைந்தபட்ச ஆதரவு விலையை அறிவித்துக் கொண்டிருக்கின்றன. உ பி அரசாங்கம் சமீபத்தில் அறிவித்திருக்கின்ற கடன் தள்ளுபடி என்பதும் கூட, நிர்ணாயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளைக் கடைபிடித்திட முடியாமல் போனதால் வறிய நிலையில் துன்பத்தில் உழன்றுகொண்டிருக்கும் விவசாயிகளுக்கு ஏமாற்றாகவே இருக்கின்றது. மேலும் இப்போது, விவசாயிகள் தங்களின் நியாயமான கோரிக்கைகளுக்காகக் கிளர்ந்தெழுந்திட நிர்ப்பந்தப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கையில், அரசாங்கமானது கைமாறாக அவர்கள் மீது துப்பாக்கி சூடு நடத்திக்கொண்டிருக்கின்றது. யூனியன் உள்துறை அமைச்சர் போன்ற கொடுங்கோன்மையான தலைவர்கள் அத்தகைய "பரவிக்கொண்டிருக்கும் அமைதியின்மை"யை கடுமையாக அடக்கிடுமாறு மத்தியப் பிரதேச அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டுள்ளனர்.

அரசாங்கமானது கடந்த நிதியாண்டில் 9 லட்சம் கோடி ரூபாய்களை பெரும் தொழில் குடும்பங்களுக்கும் பணம் படைத்தவர்களுக்கும் வரித் தள்ளுபடிகளாகவும் வரிச் சலுகைகளைகளாகவும் தாராளமாக வழங்க முடியும்போது, இப்போது அதன் செய்தித்தொடர்பாளர்கள் பொருளாதாரத்தில் பள்ளம் விழுந்துவிட்டது என்று கூறிக்கொண்டு, வெட்கமில்லாமல் விவசாயக் கடன் தள்ளுபடி செய்வதை எதிர்க்கின்றனர். பாஜகவானது நாட்டு மக்களுக்கு உத்தரவாத மளித்திட்ட அச்சாதின் ( நல்ல நாட்கள்) என்பதன் கண்கொள்ளாக் காட்சி இதுதான்.

## அகில இந்திய கண்டன நாள் அனுஷ்டிக்க எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) அறைகூவல்

அதிர்ச்சியூட்டும் இந்த மத்தியப் பிரதேச துப்பாக்கி சூட்டை எதிர்த்து ஜூன், 14 அன்று நாடு தழுவிய கண்டன நாள் அனுஷ்டித்திடவும், பலியானவர்களுக்கு போதிய இழப்பீடு வழங்கிடக் கோரியும், இத்தகைய கொடிய குற்றத்தைப் புரிந்த காவல் அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகளுக்கு கடுமையான தண்டனை வழங்கிடக்கோரியும் அறைகூவல் விடுக்கும் அதேவேளையில், போராடிக் கொண்டிருக்கும் விவசாயிகள் பிற்போக்குவாத மற்றும் சமரசவாத சக்திகளின் ஏமாற்று வார்த்தைகளையும் வெளித்தோற்ற வீராவேச வார்த்தைகளினால் வழிநடத்தப்பட்டுவிடாமல், தங்களின் நியாயமான கோரிக்கைகளை அதன் தர்க்க ரீதியான முடிவிற்குக் கொண்டுசென்றிட, சரியான தலைமையின் கீழான ஒன்றுபட்ட சக்தியாய்ந்த நீண்ட நெடிய போராட்டங்களைக் கட்டியமைத்திட வேண்டுமென்று எமது கட்சி அறைகூவல் விடுக்கின்றது ■

## மத்தியப்பிரதேச மாநிலத்தில் போலீஸ் துப்பாக்கி சூட்டினால் விவசாயிகள் கொல்லப்பட்டதை எதிர்த்து ஜூன் 14, 2017 அகில இந்திய கண்டன நாள்




மன்சோர் படுகொலைக்கெதிராக ஜூன் 8ம் தேதி நடைபெற்ற போராட்ட இயக்கங்கங்கள் ( மேலிருந்து கீழாக – இடப்பக்கத்திலிருந்து ) ஹரியாணா, பீஹார், ஆந்திரம்–தெலுங்கானா, மேற்கு வங்கம், கர்நாடகா மற்றும் சென்னை, தமிழ்நாடு









# விவசாயிகளின் ஒற்றுமையும், அரசியல் விழிப்புணர்வும் இன்றைய தருணத்தின் தேவை

2ம் பக்கத் தொடர்ச்சி

சார்ந்ததா, அல்ல. விவசாயம் சார்ந்த பிரச்சினைகள் யாவும் நாட்டின் தொழிற்துறையையும் உள்ளடக்கிய பொருளாதாரத்தில் ஏற்படும் நெருக்கடிகள், சரிவுகள், வீழ்ச்சிகள், பொதுவான வேலையில்லாத் திண்டாட்டம் மற்றும் விலையேற்றம் ஆகியவையுடன் அதிகத் தொடர்புடையனவாகும். எனவே, விவசாயிகளுக்கு சில சலுகைகளைக் கொடுத்து அவர்களை துக்காணி நிலத்துடன் கட்டிப் போடுவது நமது நாட்டின் ஆளும் முதலாளித்துவ வர்க்கத்தின் சதித்திட்டம் என்பதையும் நாம் புரிந்துகொள்ளவேண்டும். நவீன பண்ணைமுறை விவசாயத்தை செய்து விவசாய உற்பத்தியை தொழில்மயமாக்கினால் ஊரக மக்கள் இருக்கும் வேலையையும் இழந்துவிடுவர். ஆலைத் தொழிலாளர்களாக அவர்களை உள்வாங்குமளவிற்கு நெருக்கடிமிகுந்த இன்றைய காலத்தில் ஆளும் முதலாளித்துவத்திற்கு வழியில்லை. இதனால் மக்கள் வீதிக்கு போராட வந்துவிடுவர். தீராத சந்தை நெருக்கடியிலும் வேலையில்லாத்திண்டாட்டத்திலும் சிக்கித் தவிக்கும் இந்திய முதலாளித்துவம் கிராம மக்களை துண்டு நிலத்துடன் கட்டிப்போட்டு அரைப் பட்டினியும் அரைகுறை ஆடையுமாக நாகரிகமடையாத மனிதர்களைப் போலவே அவர்களை வைத்திருக்க விரும்புகின்றனர். எனவேதான் 'ஒரு உண்மையான மார்க்சிஸ்ட்–லெனினிஸ்ட், நிலத்தை நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கும் மிக ஏழ்மையான விவசாயிகளுக்கும் விநியோகிக்கும் படி வற்புறுத்துகிற அதே வேளையில் விவசாயத்தை நவீனப்படுத்தவும் விருத்திசெய்யவும் கோரவேண்டும்' என தோழர் சிப்தாஸ் கோஷ் வலியுறுத்துகிறார்.

இவ்வாறாக விவசாயிகளின் பிரச்சினைகளை விவாதித்து இறுதியில் அவர்களிடம் தோழர் சிப்தாஸ் கோஷ் குறிப்பிடுகின்றார்: "உங்கள் முன் மூன்று பிரச்சினைகள் இருப்பதை நீங்கள் காண்கிறீர்கள். முதலாவது வேலையில்லாத் திண்டாட்டம். இரண்டாவது விவசாயத்தை நவீனமயமாக்குவது. மூன்றாவது, முதல் இரண்டு பிரச்சினைகளோடும் தொடர்புடைய தொழிற்புரட்சி அல்லது தங்குதடையற்ற தொழிற் வளர்ச்சி என்கிற பிரச்சினை. ஏனெனில், தொழிற்புரட்சியின் மதகுகளைத் திறந்துவிட முடியாவிட்டால் விவசாயத்தை நவீனமயமாக்குவதோ அதன்மூலம் உள்நாட்டுச் சந்தையை தொடர்ந்து விரிவாக்குவதோ வேலையில்லாத்திண்டாட்டத்தைத் தீர்ப்பதோ சாத்தியமில்லை. இதனை அடைவதற்கு நம் நாட்டில் முதலாளித்துவ எதிர்ப்பு சோசலிசப் புரட்சி கட்டியமைக்கப்படவேண்டும் என்பதை நாம் அனைவரும் அறிவோம்" என்றார்.

தோழர் சிப்தாஸ் கோஷ் இந்த உரையை நிகழ்த்தி சுமார் அரை நூற்றாண்டாகிறது. முதலாளித்துவ அமைப்புதான் கிராமப்புற விவசாயிகளின் பிரச்சினைகளுக்கு ஆணிவேர் என்பதை இன்று விளக்காமலேயே மக்கள் உணரமுடிகின்றது. இன்று விவசாயம் இளைய தலைமுறையை ஈர்ப்பதில்லை என்பதற்கு மற்றெல்லா சிறுதொழில்களைப்போல அதுவும் நலிவடைந்துவிட்டதுடன் நவீன தொழில்நுட்ப அம்சங்கள் எதுவுமே குறுநிலத்தில் செயல்படுத்த முடியாது என்பதும் காரணமாகும்.

### விவசாயத்தில் அதிகரித்துவரும் கார்ப்பொரேட்மயம்

பிற தொழில்களைப்போலவே விவசாயத்திலும் சிறு மூலதனங்கள் சிலர் கையில் குவிந்து பெரும் மூலதனமாகவும் ஏகபோகமாகவும் மாறிவந்தது. தாராளமய தனியார்மயக் கொள்கைகளைக் கொண்ட உலகமயம் வந்தபிறகு நில உச்சவரம்பு தளர்த்தப்பட்டு ஆயிரக்கணக்கான ஏக்கர் விவசாய நிலங்கள் தொழிற்சாலைகளுக்காக கையகப்படுத்தப் பட்டன. நிரந்தர கனரக ஆலைகள் கட்டப்படுவதற்குப் பதிலாக எப்பொழுது வேண்டுமானாலும் முதலீட்டை திரும்ப எடுத்துக்கொண்டு ஓடிவிடும் எலெக்ட்ரானிக்ஸ், ஐடி, ஆட்டோமொபைல் போன்ற ஆலைகள் வருவதற்கே விவசாய நிலங்கள் பயன்படுத்தப்பட்டன. ஏராளமான சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் நிறுவப்பட்டு அவை இன்று காலியாகக் கிடக்கின்றன.

இந்தப்பின்னணியில், சந்தை நிச்சயம் என்பதால், அத்தியாவசிய உணவுப்பொருட்கள் உற்பத்தியில் கார்ப்பொரேட்டுகள் நுழைந்துவிட்டனர். கனரக டிராக்டர்கள், இயந்திரங்கள், மரபியல் தொழில்நுட்பம், குளிர்ப்பதன சேமிப்பு கிடங்குகள், ஆன்லைன் வர்த்தமுறை மற்றும் ரிலையன்ஸ் ஃபிரஷ், நீல்கிரீஸ், பிக் பேஸ்கட், குரோஃபெர்ஸ், அமேசான் கிராசரிஸ் போன்ற கடைகள் மூலம் எல்லா இடங்களிலும் நுகர்வோரை அடையும் வழிமுறை என எல்லா வளர்ச்சிகளையும் இன்று ஏகபோகங்களால் மட்டுமே பயன்படுத்த முடிவதால் விவசாயத்தில் இவர்கள் இறங்கி விட்டார்கள். பத்தாயிரம் ஏக்கர் கணக்கில் நிலங்களை வாங்கிக் குவித்து காய்கறி, பழத் தோட்டங்கள், மலர்ப்பயிற்கள் பணப்பயிர்கள் என எல்லா சாகுபடியும் இனி இவர்கள் செய்வார்கள். கைத் தொழில், நெசவு போன்ற சிறு தொழில்கள் அழிந்து வருவது போன்று விவசாயத்திலும் சிறு குறு விவசாயிகள் தாக்குப்பிடிக்க முடியாமல் நிலத்தை இவர்களிடம் விற்றுவிட்டு விவசாயத் தொழிலிலிருந்தே விலகிச் சென்றுவிடுவார்கள். இது முதலாளித்துவத்தின் தவிர்க்கமுடியாத வளர்ச்சி விதியாகும்.

சாமானிய விவசாயி தன் நன்மைக்காகக் கோரும் பாசன வசதி மேம்பாடு, நதிநீர் இணைப்பு போன்ற பொதுமக்கள் செலவில் போடப்படும் தேசிய அளவிலான திட்டங்களும் இனி கார்ப்பொரேட்டுகளுக்குத்தான் பயன்படும் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. விவசாயத்துறையில் தோன்றி வளர்ந்துவரும் ஏகபோக உற்பத்தியைப் பற்றி விழிப்புணர்வு கொள்வது அவசியமாகும்.

### விவசாயிகள் முன் உள்ள கடமைகள்

வறட்சி நிவாரணம், கடன் தள்ளுபடி, குறைந்த பட்ச ஆதார விலை ஆகிய கோரிக்கைகளுக்காக தலைநகர் டெல்லியில் நடத்தப்படும் விவசாயிகளின் போராட்டம் தேசத்தின் மனசாட்சியை தட்டியெழுப்பிவிட்டது. விவசாயிகளின் விழிப்புணர்வுடன் கூடிய, அமைப்புரீதியாக உறுதிகொண்ட, சக்திவாய்ந்த போராட்டத்தை நடத்த முடிந்த புதியதொரு நல்ல சூழல் உருவாகியிருக்கிறது. எனவே விரக்தி, அவநம்பிக்கை, தலைவிதி வாதம் ஆகியவற்றிலிருந்து விவசாயிகள் விடுபட வேண்டும். தற்கொலைப்பாதையிலிருந்து விவசாயிகள் விலக்கப்பட்டு தங்களின் நியாயமான கோரிக்கைகளுக்காக அவர்களை போராட்டப் பாதைக்கு அழைத்து வர வேண்டும். அரசியல் விழிப்புணர்வு கொண்ட விவசாயிகள் போராட்ட அமைப்பை உருவாக்கிக் கொண்டுவிட்டால் மிகக் கொடிய அடக்குமுறையின் நடுவே போலீசையும் ராணுவத்தையும்கூட எதிர்த்து தங்கள் போராட்டத்தை நடத்த வல்லவர்கள் ஆகிவிடுவர். தற்கொலை மனப்பான்மையில் எந்த ஒரு விவசாயியும் அவரைச் சார்ந்த குடும்பமும் ஒருபோதும் வீழ்ந்துவிடக்கூடாது என்பதை நாங்கள் வலியுறுத்துகிறோம். தோழர் சிப்தாஸ் கோஷின் உரையை இங்கு குறிப்பிடுகிறோம்: "(அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு எதிராக) வியட்நாமில் தங்கள் போராட்டத்தை விட்டுக் கொடுக்காத அந்த மக்கள் யார்? உங்கள் அனைவருக்கும் நினைவூட்டுகிறேன் – அவர்கள் விவசாயிகள்தாம், உங்களைப்போன்ற விவசாயிகள்தாம்! அவர்கள் தம் தோள்களில் துப்பாக்கிகளைத் தாங்கிப் போரிட்டார்கள். எதிரியின் குண்டுவீச்சு விமானங்கள் மறைந்தபின்பு அவர்கள் பதுங்கு குழிகளிலிருந்து வெளியே வந்து வயல்களில் வேலை செய்யத் தொடங்குவார்கள். . . . எப்பொழுதும் அவர்கள் தம் உறுதிமிக்க வைராக்கியத்தையும் தைரியத்தையும் மனோதிடத்தையும் தெளிவான அரசியல் இலக்கையும் இழந்ததேயில்லை. அமெரிக்க ஏகாதிபத்தியத்தைத் துரத்துவதும் (வியட்நாமின்) சைகோன் அரசாங்கத்தை வீழ்த்துவதும் மக்கள் ஜனநாயக அரசினை நிறுவுவதும்தான் அவர்களின் இலட்சியமாக இருந்தது. உங்கள் இலட்சியம் (இந்திய) பூர்ஷ்வாக்களை அதிகாரத்திலிருந்து தூக்கியெறிந்துவிட்டு சோசலிசத்தையும் சோசலிச அரசையும் நிறுவுவதுதான். 'டாங்குகளும் குண்டு வீச்சு விமானங்களும் வெடிமருந்தும் இல்லாமல் நாங்கள் எப்படிப் போராடுவோம்' என்று வியட்நாம் மக்கள் ஒருபோதும் சாக்குச் சொன்னதில்லை. அப்படிப்பட்ட வாதங்களை அவர்கள் முன்வைக்கவில்லை. அவர்கள் மனிதர்கள் இல்லையா? அவர்களும் விவசாயிகள் இல்லையா? அவர்கள் நிலைமையும் சரியாக உங்கள் நிலைமைபோலத்தான் இருந்தது.

பின் இப்படிப்பட்ட மாபெரும் யுத்தத்தைத் தொடர்ந்து நடத்துவதற்கான பலத்தையும் உணர்வையும் அவர்களுக்குக் கொடுத்தது எது? அவர்கள் அரசியல் விழிப்புணர்வு பெற்றிருந்தார்கள் என்ற ஒன்றேதான் அது. போராட்டத்திற்கான பாதையைத் தேர்ந்தெடுப்பதில், அதற்கும் மேல், சரியான அரசியல் வழியையும் சரியான அரசியல் கட்சியையும் தேர்ந்தெடுப்பத்தில் அவர்கள் எந்தத் தவறையும் செய்யவில்லை. நமது நாட்டிலும் ஆளும் முதலாளித்துவ வர்க்கத்தை அதிகாரத்திலிருந்து தூக்கியெறிந்துவிட்டு சோசலிசப் பொருளாதார அமைப்பை நிறுவுவதே போராடும் அனைத்துத் தரப்பு மக்களின் அரசியல் விழிப்புணர்வாக இருக்கவேண்டும்".

### விவசாயிகள் போராட்டத்தில் அமைப்புறுதியும் அரசியல் விழிப்புணர்வும் மேம்படவேண்டும்

டெல்லியில் போராடும் விவசாயிகளின் போராட்டமாகட்டும், நெடுவாசல் மற்றும் கதிராமங்கலத்தில் நடைபெறும் போராட்டமாகட்டும் அல்லது அகில இந்திய அளவில் விவசாயிகள் தங்களின் பல்வேறு நியாயமான பிரச்சினைகளுக்காக நடத்துகின்ற போராட்டங்களாகட்டும், இப்போராட்டங்களனைத்தும் அவைகளின் தர்க்கரீதியான முடிவிற்குச் சென்றடையவேண்டுமெனில் அவைகள் யாவும் ஒரு உண்மையான புரட்சிகரத் தலைமையின்கீழ் வழிநடத்தப்பட்டாக வேண்டும்.

நாட்டிலுள்ள முற்போக்கு எண்ணம் கொண்ட விவசாய சங்கங்கள் அனைத்தும் தங்களை குறைந்தபட்ச திட்டத்தின் கீழ் ஒன்றிணைத்துக் கொண்டு தற்போது நடக்கும் போராட்டத்தைத் தொடரவும் தீவிரப்படுத்தவும் வேண்டும். விவசாயிகளின் ஒன்றிணைந்த போராட்டத்தை ஜனநாயக எண்ணங்கொண்ட அனைத்துத் தரப்பு மக்களும் ஆதரித்து உதவவேண்டும். விவசாயிகள் தங்கள் போராட்டங்களை ஒருமுகப்படுத்தி சரியான பாதையில் நடத்த, எக்காரணம் கொண்டும் தலைமையை பூர்ஷ்வா சமரசவாத சக்திகளிடமோ குட்டி முதலாளித்துவக் கட்சிகளிடமோ கைநழுவிச் செல்ல விட்டுவிடக்கூடாது. போராட்டத்தின் தலைமை யார் கையில் இருக்கின்றது என்பது மிக முக்கியக் கேள்வியாகும்.. எதிரிகளுடன் சமரசம் செய்துவிடாத, குறுகிய தேர்தல் லாபத்திற்காக முதுகில் குத்திவிடாத, போராட்டத்தைப் பாதியிலேயே விட்டுவிட்டு ஓடிவிடாத, பதவி அதிகாரத்திற்காக தங்களை விற்றுக்கொள்ளாத உண்மையான தலைமையை, புரட்சிகரத் தலைமையை விவசாயிகள் கண்டறிய வேண்டும்.

எமது கட்சியான எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) ம் இதன் விவசாயிகள் சங்கமான அகில இந்திய விவசாயிகள் விவசாயத் தொழிலாளர்கள் சங்கமும் (AIKKMS) நியாயமான கோரிக்கைகளுக்காகப் போராடும் விவசாயிகளுடன் இணைந்து போராடி வருகின்றது. விவசாயிகளின் ஒன்றுபட்ட போராட்டம் தளர்வுறாமல் தொடரவும் அவர்களின் அரசியல் விழிப்புணர்வு மேம்படவும் அதன்மூலம் விவசாயிகள் போராட்டத்தை தர்க்கரீதியான முடிவிற்கு இட்டுச் செல்லவும் எமது கட்சியும் விவசாய சங்கமும் போராட உறுதிகொண்டுள்ளது ■

# ஜூன் 26, அகில இந்திய ஜனநாயக இளைஞர் சங்கத்தின் 51வது ஸ்தபாக தினம் அனுஷ்டிப்பு







சென்னையில் ஜூன் 26, 2017 அன்று நடைபெற்ற கூட்டத்தில் தோழர் இராஜமாணிக்கம், ஏஐடிஓய்ஓ, சென்னை மாவட்டத் தலைவர் உரையாற்றுகிறார், கூட்டத்தில் கலந்துகொண்டோர்

தேனியில் ஜூன் 30, 2017 அன்று நடைபெற்ற கூட்டத்தில் தோழர் இராஜகோபால், ஏஐடிஓய்ஓ, மாநிலத் தலைவர் உரையாற்றுகிறார்

## போராடும் தமிழக விவசாயிகளுக்கு ஆதரவாக ஒருநாள் வேலைநிறுத்தம் செய்த தொழிலாளர்களின் 8 நாள் சம்பளத்தை அநியாயமாக பிடித்தம் செய்த பிரிக்கால் நிர்வாகத்தைக் கண்டித்து அனைத்து தொழிற்சங்கங்களின் ஆர்ப்பாட்டம்

தமிழ்நாட்டில், வறட்சி நிவாரணம், கடன் தள்ளுபடி, விவசாய விளை பொருட்களுக்கு சரியான விலை போன்ற நியாயமான கோரிக்கைகளுக்காக போராடும் விவசாயிகளுக்கு ஆதரவு தெரிவித்து 25.04.2017 அன்று பொது வேலைநிறுத்தம் செய்யும்படி தமிழ்நாட்டின்அனைத்துத் தரப்பு தொழிலாளர் களும் மத்திய தொழிற்சங்கங்களும் அறைகூவல் விடுக்கப்பட்டது. அதன்படி கோவை பிரிக்கால் நிறுவனத் தொழிலாளர்கள் ஒருநாள் வேலைநிறுத்தப் போராட்டத்தில் பங்குக் கொண்டார்கள். இதற்கு தண்டனையாகத் தொழிலாளர்களின் 8 நாட்கள் சம்பளத்தை நிர்வாகம் பிடித்தம் செய்தது. இதனை எதிர்த்து தொழிலாளர்கள் காலவரையற்ற உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டார்கள்.

இவர்களுக்கு ஆதரவு தெரிவித்து 29.06.2017 அன்று அனைத்து மத்திய தொழிற்சங்கங்களும் சென்னை ஆட்சியர் அலுவலகத்தின் முன்பு ஆர்ப்பாட்டம் நடத்தியன. இந்த ஆர்ப்பாட்டத்தில் ஏஐயுடியுசி மாநிலச் செயலாளர் வி சிவகுமார் கலந்துக்கொண்டு உரையாற்றினார். உரையாற்றிய அனைத்துத் தலைவர்களும் வேலைநிறுத்தம் செய்வது தொழிலாளர்களின் அடிப்படை உரிமை மற்றும் ஒருநாள் வேலை நிறுத்தத்திற்காக 8 நாட்கள் சம்பளம் பிடித்தம் செய்திருப்பது தொழிலாளர் மீது தொடுக்கப்பட்டுள்ள தாக்குதல் என கண்டனம் தெரிவித்துள்ளனர். மேலும் அரசாங்கம் இப்பிரச்சினையில் தலையிட்டு உடனடித் தீர்வு காணவேண்டும் எனக் கேட்டுக்கொண்டனர் ■




சென்னையில் 29.06.2017 அன்று நடைபெற்ற அனைத்து தொழிற்சங்க ஆர்ப்பாட்டத்தில் வி சிவகுமார், ஏஐயுடியுசி, மாநிலச் செயலாளர் உரையாற்றுகிறார்

## ஆர் எஸ் எஸ்ஸை சேர்ந்தவர்கள் என்று சொல்லக்கூடியவர்களால் சிபிஐ (எம்) மின் பொதுச் செயலாளர் மீது நடத்தப்பட்ட தாக்குதலை எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) வன்மையாகக் கண்டிக்கிறது

*எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் பிரவாஸ் கோஷ் அவர்கள் ஜூன் 8, 2017 அன்று வெளியிட்ட அறிக்கை:*

ஜூன் 7, 2017 அன்று சிபிஐ (எம்) கட்சியின் டெல்லி தலைமையகத்தில் நடைபெற்ற செய்தியாளர் கூட்டத்தில் அதன் பொதுச் செயலாளர் சீதாராம் யெச்சூரி அவர்கள் மீது ஆர்எஸ்எஸ்ஸை சேர்ந்தவர்கள் என்று சொல்லப் படக்கூடிய இரண்டு சமூக விரோதிகளால் நடத்தப்பட்ட கோழைத்தனமான தாக்குதலை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம். தன்னுடைய சித்தாந்த–அரசியல் மேலாதிக்கத்தைத் திணிப்பதற்காக பாசிசப் பாதையில் நடைபோடும் எந்தவொரு பிற்போக்கு சக்தியையும் போலவே ஆர் எஸ் எஸ்ஸானது கொடூரமான பலாத்காரத்தால் எந்தவொரு எதிர்ப்புக்குரலையும் ஒடுக்க நினைக்கிற தென்பதற்கு இது ஒரு அப்பட்டமான சாட்சியமாகும்.

சரியாக சிந்திக்கக்கூடிய ஜனநாயக எண்ணங் கொண்ட மக்கள் அனைவரும் இந்தத் தாக்குதலைக் கண்டிப்பதோடு, இந்தப் பாசிச சக்திகளுக்கு கட்டாய தோல்வியைத் தரும்பொருட்டு ஒன்றுபட்ட விழிப்புணர்வுகொண்ட இயக்கத்தை கட்டி யெழுப்ப தங்கள் அணிகளை நெருக்கிக் கொள்ளவும் வேண்டும் ■

## புதுச்சேரி மாநிலத்தின் சட்டப்பேரவைக்கு மூன்று நியமன உறுப்பினர்களை மத்திய அரசாங்கம் நியமித்ததை எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சி வன்மையாகக் கண்டிக்கிறது

*எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் பிரவாஸ் கோஷ் அவர்கள் ஜூலை 5, 2017 அன்று வெளியிட்ட அறிக்கை:*

புதுச்சேரி மாநிலத்தின் சட்டப்பேரவைக்கு மூன்று நியமன உறுப்பினர்களைத் திடீரென்று மாநில துணைநிலை ஆளுநரின் பரிந்துரையின் பேரில் மத்திய அரசாங்கம் நியமித்ததை எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) மத்தியக் கமிட்டி வன்மையாகக் கண்டிக்கிறது. இது அறிவுக்குப் பொருத்தமில்லாத, பொறுப்பற்ற, ஜனநாயக உணர்வற்ற தீமையான நடவடிக்கையாகும். புதுச்சேரி மக்கள் மீதும் ஜனநாயக உரிமைகள் மீதும் தொடுக்கப்பட்ட பெருந்தாக்குதலாகும்.

மேலும் மக்களால் சட்டபூர்வமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தின் முறையான முன்மொழிதலும், பரிந்துரைத்தலும் இன்றி அறிவிக்கப்பட்டுள்ள இந்நியமனம், பாஜக அரசாங்கத்தின் உள்நோக்கமுடைய தன்மை பற்றி ஏராளமான செய்திகளை வெளிப்படுத்துகிறது.

இப்பதவியில் அமர்த்தப்பட்ட நாளிலிருந்தே துணைநிலை ஆளுநர் கிரண்பேடி அவர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட ஆளும் புதுச்சேரி அரசாங்கத்துடன் முரண் பட்டும், மோதல் போக்கில் செயல்பட்டும் பல்வேறு விமர்சனங்களுக்கு உள்ளாகி வருகிறார். இந்த மோதல் போக்குகளும், தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தின் செயல்பாட்டில் குறுக்கீடு செய்வதும் சாதாரண மக்களின் அன்றாட வாழ்க்கை நடவடிக்கை களில் கடும் பாதிப்புகளை உண்டாக்கி வருகிறது.

இந்தப் பின்னணியில் கடந்த பொதுத்தேர்தலில் மக்களால் தோற்கடிக்கப்பட்ட பாஜக மாநிலத் தலைவர், பாஜகவின் மாநிலப் பொருளாளர், இந்துத்துவப் பரிவாரத்தைச் சேர்ந்த தனியார் பள்ளி நடத்துநர் ஆகியோரின் நியமனம் என்பது மக்களின் அடிப்படை உரிமைகளை கோட்பாட்டு ரீதியாகவும், நடைமுறையிலும் கேலி செய்வதாகவே இருக்கிறது.

எனவே இந்த “நியமனங்களை உடனடியாகத் திரும்பப் பெறுமாறும், தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மாநில அரசாங்கத்தின் மீது ஏறி முரட்டுச் சவாரி செய்ய முனைந்துள்ள மத்திய அரசாங்கத்தின் குறுக்கீடுகளை, குடியரசுத்தலைவர் நேரடியாகத் தலையிட்டு, நிலமையைச் சீரமைக்கும்படியும் எஸ்யுஐ (கம்யூனிஸ்ட்) கட்சி கேட்டுக்கொள்கிறது.

மேலும் மத்திய பாஜக அரசாங்கம் அது பதவியேற்ற நாளிலிருந்து கடைபிடித்துவரும் ஏதேச்சதி காரச் செயல்பாடுகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதற்கு எதிராக புதுச்சேரி மாநில மக்கள் மட்டுமின்றி நாட்டின் நல்லெண்ணம் உடைய ஜனநாயக உணர்கொண்ட மக்களும், ஒருங்கிணைந்து குரல் கொடுக்க முன்வருமாறு எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) வேண்டுகோள் விடுக்கிறது.

## மாபெரும் நவம்பர் புரட்சி நூற்றாண்டு விழா

7 நவம்பர், 2016 – 17 நவம்பர், 2017

**SUCI (COMMUNIST)**



Registered Newspaper
Posted at : Chennai Egmore RMS/1Patrika Channel
Posted on :
Publication : 2nd week of Every Month

பாட்டாளி சிந்தனை

Post.Reg.No:TN/CCN/429/2015-17
WPP Licence No: TN/PMG(CCR)/WPP-373/2015-17
Registered with the Registrar of Newspapers for India No : 62018/88

# மக்கள் விரோத சரக்கு மற்றும் சேவை வரியை (GST) எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) வன்மையாகக் கண்டிக்கிறது

*எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் பொதுச் செயலாளர், தோழர் பிரவாஸ் கோஷ் அவர்கள் 29.06.2017 அன்று வெளியிட்ட அறிக்கை:–*

ஈவிரக்கமற்ற அடக்குமுறை முதலாளித்துவம் அவ்வமைப்பின் தொற்று நோயான அதிகரித்துவரும் நெருக்கடியிலிருந்து தப்பித்துக்கொள்ள சாமானிய மக்கள் மீது நேரடி வரிகளின் சுமையை கடுமையாக அதிகரித்து, கிட்டத்தட்ட அனைத்துப் பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகளை வேகமாக உயர்வதற்கு வழிவகுத்து, இவ்வாறாக ஒவ்வொரு நாளும் அவர்கள் மீது மற்றுமொரு வரிவசூல் காட்டுமிராண்டித்தனத்தை கொண்டுவந்திருக்கும் சரக்கு மற்றும் சேவை வரி (ஜிஎஸ்டி – GST) அறிமுகப்படுத்தப்பட்டிருப்பதை நாங்கள் வன்மையாக எதிர்க்கின்றோம்.

மற்றொருபுறம், இப்புதிய வரிக்கொள்கை முதலாளித்துவ உற்பத்தியாளர்கள் மற்றும் கார்ப்பொரேட் நிறுவனங்களை வரி கட்டுவதிலிருந்து விடுவித்திடும். இது தொடர்பாக, முதலாளித்துவத்தில் கொண்டுவரப்படும் எந்தப் பொருளாதார சீர்திருத்தத்தின் குணாம்சம் மற்றும் அதன் தாக்கத்தை இவ்வமைப்பு முறையிலிருந்து பிரித்துப்பார்த்துப் புரிந்துகொள்ள முடியாது என்பதை நினைவில் கொள்ள வேண்டும். முதலாளித்துவ வர்க்கத்தின் ஒட்டுமொத்த நலனை முன்னிட்டு கொண்டுவரப் பட்டிருக்கும் இத்தகைய நடவடிக்கையானது வரி வருமானத்தை மத்திய அரசாங்கத்தின் கைகளில் முடக்கிக் குவித்திட வழிவகுப்பதுடன் மாநிலங்கள் அவைகளின் பொருளாதார பலத்தை கணிசமாக இழந்து விடும். விடுதலையடைந்த பின் ஒரு கூட்டாட்சி அமைப்பின் ஒத்துக்கொள்ளப்பட்ட அடிப்படைக் கொள்கையான மத்திய அரசாங்கமும் மாநிலங்களும் வருமானத்தைப் பிரித்துக்கொள்ளும் இதுவரையில் நிலவிவந்த நடைமுறையை இது அப்பட்டமாக மீறுகின்றது. இத்தகைய நடவடிக்கை மத்திய அரசாங்கத்தின் கைகளில் பொருளாதார பலம் மேலும் குவிந்திடுவதற்கு வழிவகுத்து நிச்சயம் நாட்டை மேலும் நிர்வாகப் பாசிசத்தை நோக்கித் தள்ளிவிடும். இதன் விளைவாக, மத்திய அரசாங்கம் நியாயமற்ற முறையில் வரி விதிப்பதை எதிர்த்த போராட்டத்தை வளர்த்தெடுப்பது இன்னும் கடினமாகிவிடும் என்ற உண்மை முக்கியமானதாகும்.

ஜிஎஸ்டி அறிமுகப்படுத்தப்பட்டிருப்பதை முறியடித்திட பாடுபடும் மக்கள் தங்களை அணிதிரட்டிக்கொண்டு நாடு முழுவதிலும் சக்தி வாய்ந்த இயக்கத்தை வளர்த்தெடுக்க வேண்டுமென்றும் ஜூன் 30ஆம் தேதியை ஜிஎஸ்டியை எதிர்த்த அகில இந்திய கண்டன நாளாக அனுஷ்டிக்க வேண்டுமென்றும் நாங்கள் அறைகூவல் விடுக்கிறோம் ■

**ஆகஸ்ட் 5**

பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் தலைவர்

## சிப்தாஸ் கோஷ் அவர்களின்

**41வது நினைவு தினம்**

## பொதுக்கூட்டம்

ஆக 11, 2017 — மாலை 6 மணி

தி நகர், பஸ்நிலையம் அருகில், சென்னை

தலைமை **A ரெங்கசாமி**

தமிழ்நாடு மாநிலச் செயலாளர், எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்)

சிறப்புரை **K ஸ்ரீதர்**

மத்திய ஸ்டாப் உறுப்பினர், எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்)

**S U C I (Communist)**
















**ஜூன் 30, 2017 மக்கள் விரோத ஜிஎஸ்டியை எதிர்த்து நாடு முழுவதும் அகில இந்திய கண்டன நாள்**

**ஆந்திர பிரதேசம், பீஹார், மத்திய பிரதேசம், குஜராத் மற்றும் சென்னை, தமிழ்நாடு**

சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா (கம்யூனிஸ்ட்), தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டிக்காக, அச்சிட்டு–வெளியிடுபவர்: வி பி நந்தகுமார் அலுவலகம் : பு எண் 16 (ப எண் 18), இராட்லர் தெரு, தூளை, சென்னை 600 112 அச்சகம் : ஸ்ரீ அய்யனார் பிரிண்டர்ஸ், எண் 10, சுப்பாராவ் நகர், 2வது தெரு, தூளைமேடு, சென்னை 600 094, ஆசிரியர்: வி பி நந்தகுமார்

Published by: V P Nandakumar on behalf of Socialist Unity Centre of India (Communist), Tamilnadu State Organising Committee, from New No16 (Old No18), Rotler Street, Choolai,Chennai 600 112 and Printed at Sri Aiyanar Printers, No.10, Subha Rao Nagar, 2nd Street, Choolaimedu, Chennai 600 094. Editor : V P Nandakumar
Tel : 044 - 2643 3169, 94445 51930 Email : suci_tn@yahoo.com Please visit our Website : **www.sucicommunist.org**